සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved ]

(නව නිර්දේශය/புதிய பாடத்திட்டம்/New Syllabus)

NEW

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2019 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2019 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2019

දෙමළ I
தமிழ் I
Tamil I

72 T I

10.08.2019 / 0830 – 1140

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**அறிவுறுத்தல்கள் :**

※ பகுதி **I** இல் உள்ள **இரு** வினாக்களுக்கும், பகுதி **II** இல் உள்ளவற்றுள் எவையேனும் **மூன்று** வினாக்களுக்கும், எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை தருக.

## பகுதி I

**1.** மேல்வரும் செய்யுள்களை வாசித்து அவற்றின்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

(அ) விளையாடு ஆயமொடு வெண்மணல் அழுத்தி
மறந்தனம் துறந்த காழ்முளை அகைய
நெய்பெய் தீம்பால் பெய்தினிது வளர்ப்ப
நும்மினுஞ் சிறந்தது நுவ்வை ஆகுமென்று
அன்னை கூறினள் புன்னையது சிறப்பே
அம்ம நாணுதும் நும்மொடு நகையே
விருந்திற் பாணர் விளரிசை கடுப்ப
வலம்புரி வான்கோடு நரலும் இலங்குநீர்த்
துறைகெழு கொண்கநீ நல்கின்
நிறைபடு நீழல் பிறவுமா ருளவே.

(i) உணர்த்தக் கருதியதை நேரடியாகவன்றிக் குறிப்பால் உணர்த்திய தோழியின் மதிநுட்பத்தைத் துலக்குக.

(ii) இச்செய்யுளில் அமைந்துள்ள உவமையின் சிறப்பினை விளக்குக.

(iii) பின்வரும் சொற்களின் பொருளைத் தருக.
- காழ்; அகைய; விளர்; நரலும்

(ஆ) நைவீரலீர் மைந்தீ ரினித்துயரா னாடிறந்து காடு நோக்கி
மெய்வீரர் பெயர்ந்ததுவு நலமாயிற் றாமன்றே விலங்கற் றிண்டோட்
கைவீரக் களிற்றனைய காளையிவன் றன்னோடுங் கலந்து நீவிர்
ஐவீரு மொருவீரா யகலிடத்தை நெடுங்கால மளித்தி ரென்றாள்.

(i) இச்செய்யுள் இடம்பெறும் சந்தர்ப்பத்தினை விளக்குக.

(ii) இச்செய்யுளில் இடம்பெறும் உவமைகளை எடுத்துக்காட்டி விளக்குக.

(iii) குகனை எவ்வாறு கோசலை சிறப்பிக்கின்றாள் என்பதைத் தெளிவுபடுத்துக.

(12 + 12 = 24 புள்ளிகள்)

[பக். 2 ஐப் பார்க்க

kalvi.lk

**2.** 'அ' பகுதியிலுள்ள கவிதையைப் படித்து அதன்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

அல்லது

'ஆ' பகுதியிலுள்ள உரைப்பகுதியைப் படித்து அதன்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

(அ) கானப் பறவை கலகலெனு மோசையிலும்
காற்று மரங்களிடைக் காட்டு மிசைகளிலும்,
ஆற்றுநீ ரோசை, அருவி யொலியினிலும்,
நீலப் பெருங்கடலெந் நேரமுமே தானிசைக்கும்
ஓலத் திடையே யுதிக்கு மிசையினிலும்,
மானுடப் பெண்கள் வளருமொரு காதலினால்
ஊனுருகப் பாடுவதில் ஊறிடுந்தேன் வாரியிலும்,
ஏற்றநீர்ப் பாட்டி னிசையினிலும், நெல்லிடிக்கும்
கோற்றொடியார் குக்குவெனக் கொஞ்சும் ஒலியினிலும்,
சுண்ண மிடிப்பார்தம் சுவைமிகுந்த பண்களிலும்,
பண்ணை மடவார் பழகுபல பாட்டினிலும்,
வட்டமிட்டுப் பெண்கள் வளைக்கரங்கள் தாமொலிக்கக்
கொட்டி இசைத்திடுமோர் கூட்டமுதப் பாட்டினிலும்,
வேயின் குழலோடு வீணைமுத லாமனிதர்
வாயினிலும் கையாலும் வாசிக்கும் பல்கருவி
நாட்டினிலும் காட்டினிலும் நாளெல்லாம் நன்றொலிக்கும்
பாட்டினிலும், நெஞ்சைப் பறிகொடுத்தேன் பாவியேன்.

(i) குயில் தன் நெஞ்சைப் பறிகொடுத்த, இயற்கை தரும் இசை இன்பம் பற்றி விபரிக்குக.

(ii) சாதாரண மக்களின் அன்றாட வாழ்வு இசையில் ஊறிக் கிடப்பதுபற்றி, இப்பாடல் வரிகளில் கூறப்படுபவற்றை விளக்குக.

(iii) "மானுடப் பெண்கள் வளருமொரு காதலினால்
ஊனுருகப் பாடுவதில் ஊறிடுந்தேன் வாரி"
- இவ்வரிகளில் நீர் காணும் கவிச்சிறப்பை விளக்குக.

(iv) "நெஞ்சைப் பறிகொடுத்தேன் பாவியேன்" என்ற தொடர், இசை அனுபவத்தின் உச்சவெளிப்பாடாக அமையுமாற்றை விளக்குக.

[பக். 3 ஐப் பார்க்க

kalvi.lk

அல்லது

(ஆ) எதிர்த்தாற்போல் ஒரு நாரத்தை மரம் இருந்தது. அதில் ஒரு கிளையிலிருந்து தேன்சிட்டுக்கூடு ஒன்று லோலாக்கைப்போல் தொங்கிக்கொண்டிருந்தது. சரவணமுத்துவை அறியாமலேயே கூட்டின் கட்டிடத் திறமை அவர் மனத்தை வசப்படுத்திவிட்டது. சிறிது நேரத்துக்கெல்லாம் ஒரு சிட்டு, கூட்டின் வாசலண்டை போய்க் குந்திற்று. கூட்டுக்குள் இருந்து ஒரு குஞ்சு கத்திக் கொண்டே வாசலண்டை வந்து வாயைத் திறந்தது. வந்த குஞ்சின் வாயில் எதையோ ஊட்டிவிட்டுப் பறந்துவிட்டது குருவி. அது போன சிறிது நேரத்திற்கெல்லாம் மற்றொரு குருவி வந்து அதே காரியத்தைத் திரும்பவும் செய்துவிட்டுப் பறந்து சென்றது. இதே மாதிரி மாறிமாறிப் பல தடவை நடந்தது. குருவிகளாய் இருந்தால் கவலை இல்லாமல் இருக்குமே என்று சரவணமுத்து நினைத்துக்கொண்டார்.

இப்படி நினைத்துக்கொண்டிருக்கும்பொழுதே சரவணமுத்துவின் பார்வை மற்றொரு மரத்தில் விழுந்தது. அந்த மரத்தில் விநோதமான கொடி ஒன்று படர்ந்திருந்தது. கொடியைப் பார்த்த உடனேயே பயிர்செய்யப்பட்ட கொடி என்பது விளங்கிவிட்டது. ஆனால் மலைப்பாம்பு சுற்றிக் கொள்வதுபோல் சீந்தில் கொடி ஒன்றும் அதைச் சுற்றிக்கொண்டிருந்தது.

சரவணமுத்துவுக்கு ஏதோ ஒரு விதமான கிளர்ச்சி. கொடியின் அருகில் போய்ப் பார்த்தார். குரல்வளையைப் பிடித்து நெருக்கி ஒருவரைக் கொன்றால் கழுத்தில் குறிகள் இருக்கும் என்பார்களே, அதைப் போன்ற குறிகள் பயிர்செய்யப்பட்ட கொடியில் தென்பட்டன. உலகத்தில் பிழைக்க முயலும்போது சீந்தில் கொடியைப்போல் தரித்திரமும் கூட வந்து கழுத்தை நெரிக்காமல் இருக்காதுபோல் இருக்கிறது என்ற எண்ணம் மிதந்தெழுந்தது.

(i) தேன்சிட்டுக்களின் வாழ்க்கை பற்றிய விபரணத்தின் முக்கியத்துவத்தை விளக்குக.

(ii) பயிர்செய்யப்பட்ட கொடி, சீந்தில் கொடி என்பன பற்றிய விபரணம் எதை உணர்த்தப் பயன்படுகிறது?

(iii) ஆசிரியர் பயன்படுத்தும் உவமைகளை எடுத்துக்காட்டி, அவற்றின் சிறப்பை விளக்குக.

(iv) ஆசிரியரின் உரைநடை பற்றிக் கருத்துரை வழங்குக.

(4 × 4 = 16 புள்ளிகள்)

## பகுதி II

**3.** **காலமறிதல்** என்ற அதிகாரத்தில்,

(அ) காலமறிதலின் சிறப்பும் பயனும்

(ஆ) காலம் வராவழிப் பொறுத்திருப்பதும் அவ்வாறு இருப்பதன் சிறப்பும்

(இ) எவ்வாறு காத்திருந்து, எவ்வாறு கருமத்தை முடிப்பது

என்பவை திருவள்ளுவரால் விளக்கப்படுமாற்றை எடுத்துக்காட்டுவதுடன்,

(ஈ) அவ்வதிகாரத்தில் கையாளப்பட்டுள்ள உவமைகளை அடையாளம் காட்டி அவை ஒவ்வொன்றும் கையாளப்பட்டுள்ள நோக்கத்தைத் துலக்குக.

(20 புள்ளிகள்)

**4.** குகன் பரதனைக் காணச் சென்றது முதல், அவன் பரதனைக் கண்டு அவனது நிலை அறிந்து வணங்கிப் புகழ்வது வரையான பகுதியை அடிப்படையாகக் கொண்டு, பின்வருவனவற்றை விளக்குக.

(அ) சுமந்திரன் வாயிலாகக் குகனின் குணப்பண்பு

(ஆ) குகனது மனோநிலை மாற்றமும் செயற்பாடுகளும்

(இ) பரதனது துயரநிலை

(ஈ) பரதனது பெருந்தகைமை (20 புள்ளிகள்)

[பக். 4 ஐப் பார்க்க

kalvi.lk

**5.** **'ஒரு வெண்மணற் கிராமம் காத்துக்கொண்டிருக்கிறது'** என்ற நாவலில்,

(அ) ஆலங்கேணி என்ற கிராமம்

(ஆ) அக்கிராமத்து மக்களின் வாழ்க்கை முறைகள்

(இ) அக்கிராம மக்கள் அயற்கிராமங்களுடன் கொண்ட தொடர்பு

(ஈ) தலைமையாசிரியர் சின்னத்தம்பியின் அபிலாசைகள்

என்பன சித்திரிக்கப்படுமாற்றை விளக்குக. (20 புள்ளிகள்)

**6.** அழகிரிசாமியின் **தியாகம்** என்ற சிறுகதையை அடிப்படையாகக் கொண்டு,

(அ) கதிரேசன் செட்டியார் என்ற பாத்திரப் படைப்பு

(ஆ) கதை வளர்ச்சிக்கு ஷண்முகம்பிள்ளை என்ற பாத்திரம் உதவுமாறு

(இ) ஆசிரியர் கையாண்ட எடுத்துரைப்பு முறை

ஆகியன பற்றிக் கருத்துரைக்குக. (20 புள்ளிகள்)

**7.** பேராசிரியர் அ. சீனிவாசராகவனின் **இலக்கிய விமரிசனம்** என்ற கட்டுரையை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

(அ) 'நக்கீர விமர்சனம்' குறித்த கட்டுரையாசிரியரின் கருத்து யாது?

(ஆ) கட்டுரையாசிரியர் கூறும் இலக்கிய விமர்சன வகைகளைக் குறிப்பிட்டு, அவை பற்றிச் சுருக்கமாக விளக்குக.

(இ) இலக்கியத்தின் இயல்பு பற்றிய கட்டுரையாசிரியரின் கருத்தைத் தெளிவுபடுத்துக.

(ஈ) இலக்கிய விமர்சனம் பற்றிய கட்டுரையாசிரியரின் கொள்கை யாது? (20 புள்ளிகள்)

**8.** பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டினை** விளக்குக.

(அ) சிலப்பதிகாரம் **ஊர்காண் காதையில்** ஊழ்வினையின் வலிமை வற்புறுத்தப்படுமாறு

(ஆ) **கோயில் திருப்பதிகத்தில்,** வலிய வந்து தம்மை ஆட்கொண்ட இறைவனின் அருளை மாணிக்கவாசகர் வியக்குமாறு

(இ) தேம்பாவணி **காட்சிப்படலத்தில்** முல்லைநில இடையர்களின் உளப்பாங்கும் குழந்தை யேசுவைக் கண்டவிடத்து அவர்கள் கொண்ட குதூகலமும் உணர்த்தப்படுமாறு

(ஈ) **காரணமாலையில்** மக்க நாட்டின் அற்புதங்கள் எடுத்துரைக்கப்படுமாறு

(உ) **ஈழநாட்டுக் குறத்தில்** ஈழநாட்டின் பெருமை பேசப்படுமாறு (20 புள்ளிகள்)

* * *

kalvi.lk

AL/2019/72/T-II (NEW)

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved ]

(නව නිර්දේශය/புதிய பாடத்திட்டம்/New Syllabus)

NEW

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2019 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2019 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2019

දෙමළ II
தமிழ் II
Tamil II

72 T II

15.08.2019 / 0830 – 1140

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

| | | |
|---|---|---|
| අමතර කියවීම් කාලය | - | මිනිත්තු 10 යි |
| மேலதிக வாசிப்பு நேரம் | - | 10 நிமிடங்கள் |
| Additional Reading Time | - | 10 minutes |

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

சுட்டெண் : ..................................

**அறிவுறுத்தல்கள் :**

※ பகுதி **I** இல் உள்ள **மூன்று** வினாக்களுக்கும் பகுதி **II** இல் உள்ளவற்றுள் எவையேனும் **இரண்டு** வினாக்களுக்கும் எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

※ பகுதி **I** இல் முதலாம் வினாவில் **இருபது** வினாக்கள் **தனியாகத்** தரப்பட்டுள்ளன. அவற்றுக்கான விடைகளை **இவ்வினாத்தாளிலேயே** எழுதி, அதனை உமது ஏனைய விடைத்தாள்களின்மேல் வைத்து இணைத்துக் கொடுக்கவும்.

## பகுதி I

**1.** எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

ஒவ்வொரு கூற்றுக்கும் கீழே ஐந்து விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்து, அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.

1.1 பின்வருவனவற்றுள் இதழ்குவி உயிர்
(1) ஏ (2) ஐ (3) ஒ (4) எ (5) இ (……)

1.2 பின்வருவனவற்றுள் வளைநா மூக்கொலி
(1) ம் (2) ன் (3) ண் (4) ஞ் (5) ங் (……)

1.3 பின்வருவனவற்றுள் சொல் இடையில் 'ய்' என்ற மெய்யை அடுத்து மயங்கக்கூடிய எழுத்து
(1) ட் (2) ந் (3) ர் (4) ழ் (5) ம் (……)

1.4 பின்வருவனவற்றுள் தோன்றல் விகாரம் இடம்பெற்றுள்ள சொல்
(1) கல்லால் (2) வாசலால் (3) கதவால் (4) காற்றால் (5) நாக்கால் (……)

1.5 பின்வருவனவற்றுள் குற்றியலுகரம் கெட்டுப் புணர்ந்த சொல்
(1) மருந்துக்கு (2) கருத்துக்களம் (3) வீட்டுக்காரர்
(4) பேச்சுவார்த்தை (5) வீடற்றோர் (……)

1.6 பின்வருவனவற்றுள் புணர்ச்சியின்போது நிலைமொழியீற்று வல்லினம் இரட்டித்துப் புணர்ந்த சொல்
(1) பாட்டுப்பாடு (2) வெட்டிப்பேச்சு (3) வீட்டுவிலங்கு
(4) காட்சிப்பிரமாணம் (5) கொட்டுமேளம் (……)

[பக். 2 ஐப் பார்க்க

kalvi.lk

1.7 பின்வருவனவற்றுள் வந்தேன் என்ற சொல்லின் 'ஏன்' விகுதி உணர்த்தும் பொருள்
(1) திணையும் பாலும்
(2) இடமும் காலமும்
(3) எண்ணும் இடமும்
(4) பாலும் இடமும்
(5) காலமும் எண்ணும் (......)

1.8 பின்வருவனவற்றுள் படர்க்கைத் தற்சுட்டுப்பெயர்
(1) நான் (2) தான் (3) அவன் (4) அது (5) அவர் (......)

1.9 பின்வருவனவற்றுள் 'பல' என்பது பெயர்ச்சொல்லாக இடம்பெற்ற வாக்கியம்
(1) பலரும் எதிர்பார்த்ததுபோலவே நடந்தது.
(2) பல விடயங்கள் கவனத்திற் கொள்ளப்பட்டன.
(3) அவர் பலசரக்கு வியாபாரம் செய்கிறார்.
(4) பலவற்றையும் பற்றிப் பேசிக்கொண்டோம்.
(5) பலவாறு சிந்திக்க வேண்டியுள்ளது. (......)

1.10 பின்வருவனவற்றுள் கூட்டுப்பெயர்
(1) கொள்கை (2) நடுகை (3) மழைக்கை (4) இருக்கை (5) வாழ்க்கை (......)

1.11 பின்வருவனவற்றுள் காலம் காட்டும் தொழிற்பெயர்
(1) கொடுக்கல் (2) வாங்கல் (3) போகாமை (4) போனமை (5) வறுமை (......)

1.12 பின்வருவனவற்றுள் பண்புத்தொகை
(1) வருவிருந்து (2) நறுமணம் (3) உறுபகை (4) மலர்வனம் (5) செய்வினை (......)

1.13 பின்வருவனவற்றுள் உயர்திணைப் பலர்பாற் பெயர், எழுவாயாக அமையப்பெற்ற வாக்கியம்
(1) ஆசிரியர், சங்கக் கூட்டத்துக்குச் சென்றார்.
(2) அவர் ஆசிரியர் சங்கக் கூட்டத்துக்குச் சென்றார்.
(3) அறிஞர் எனது ஐயங்களைப் போக்கினார்.
(4) அறிஞர் கூடி முடிவெடுத்தனர்.
(5) நீ அறிஞர்களை அனுசரித்து வாழவேண்டும். (......)

1.14 அந்தப் புத்தகம் என் வீட்டில் உள்ளது. - இவ்வாக்கியத்தில் இடம்பெற்றுள்ள வேற்றுமைகள்
(1) உடைமை, இடம்
(2) எழுவாய், இடம்
(3) எழுவாய், உடைமை, இடம்
(4) இடம், செயப்படுபொருள்
(5) எழுவாய், இடம், செயப்படுபொருள் (......)

1.15 போகின்றீர்கள் என்ற சொல் தொடர்பான மிகப் பொருத்தமான இலக்கண விளக்கம்
(1) படர்க்கைப் பன்மைத் தெரிநிலை வினைமுற்று
(2) உயர்திணை முன்னிலைப் பன்மை வினைமுற்று
(3) உயர்திணை நிகழ்காலப் பன்மை வினைமுற்று
(4) உயர்திணை முன்னிலை நிகழ்கால வினைமுற்று
(5) முன்னிலை நிகழ்காலப் பன்மை வினைமுற்று (......)

1.16 பின்வருவனவற்றுள் வினையடை எது?
(1) கன்னங்கரேலென்ற
(2) எதிரும் புதிரும்
(3) அதிர்ச்சி தருகின்ற
(4) ஏட்டிக்குப் போட்டியாய்
(5) பளீரென்ற (......)

[பக். 3 ஐப் பார்க்க

kalvi.lk

1.17 பின்வருவனவற்றுள் செயப்படுபொருள் குன்றிய வாக்கியம்
(1) அவன் பாடங்களைக் கவனமாகப் படித்தான்.
(2) அவன் வாகனத்தில் ஏறி விரைந்து சென்றான்.
(3) அவன் படிப்பதற்காக என்னுடைய புத்தகத்தை எடுத்தான்.
(4) நல்ல நூல்களைப் படிப்பது மனநிறைவு தருகின்றது.
(5) தூசு தட்டித் துப்பரவு செய்தார்கள். (……)

1.18 பின்வருவனவற்றுள் 'அல்ல' என்ற சொல்லைக்கொண்டு எதிர்மறை வாக்கியமாக மாற்ற **முடியாத** வாக்கியம்
(1) அவள் எப்போதும் நிதானமாக நடந்துகொள்பவள்.
(2) அவன் ஒரு அவசரக்குடுக்கை.
(3) அதிகாலையில் எழுந்து படிப்பது நல்லது.
(4) அவளிடம் பெறுமதியான புத்தகங்கள் உள்ளன.
(5) அவரிடம் உள்ளவை மிகப்பெறுமதியான புத்தகங்கள். (……)

1.19 பின்வருவனவற்றுள் கூட்டுவினை, பயனிலையாக அமையும் வாக்கியம்
(1) அப்பா நேற்று கொழும்புக்குப் போய் வந்தார்.
(2) அம்மா மாமாவை ஆஸ்பத்திரிக்குச் சென்று பார்த்தார்.
(3) நான் புத்தகத்தை மேசையில் எடுத்து வைத்தேன்.
(4) அப்போதே நான் மருந்தைக் குடித்துவிட்டேன்.
(5) அக்கா குழந்தையைத் தூக்கிக்கொண்டு சென்றாள். (……)

1.20 பின்வருவனவற்றுள் வினாச்சொல் இடம்பெறும் வினா வாக்கியம்
(1) தமிழ் உனக்கு விருப்பமான பாடமா?
(2) தமிழ் ஏன் உனக்கு விருப்பமான பாடம்?
(3) உனக்கு விருப்பமான பாடம் தமிழா?
(4) தமிழ் உனக்கு விருப்பமான பாடம் இல்லையா?
(5) தமிழ்ப் பாடம் உனக்கு விருப்பமானதுதானா? (……)

(20 புள்ளிகள்)

* *

[பக். 4 ஐப் பார்க்க

Education கல்வி අධ්‍යාපන
kalvi.lk

Education
கல்வி
අධ්‍යාපන

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

නව නිර්දේශය/புதிய பாடத்திட்டம்/New Syllabus

NEW

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2019 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2019 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2019

| | |
|---|---|
| දෙමළ | II |
| தமிழ் | II |
| Tamil | II |

72 T II

**அறிவுறுத்தல்கள் :**

* பகுதி **I** இல் உள்ள **2** ஆம், **3** ஆம் வினாக்களுக்கும்,
* பகுதி **II** இல் எவையேனும் **இரண்டு** வினாக்களுக்கும் விடை எழுதுக.

## பகுதி I

**2.** (அ) பின்வரும் உரைப்பகுதியை **50** சொற்களில் சுருக்கி எழுதுக.

தனிநாயக அடிகளார் பொதுவாக மக்கள் எண்ணுகிற மாதிரியான தமிழ்ப் பெரியார் அல்லர்.

ஆழமான அறிவின் விளைவாக, அமைதியான தோற்றத்துடன், ஆறுதலாகச் சிந்தித்துப் பேசும் அறிஞர் அவர். எந்த விஷயத்தையிட்டும் ஆழமாக ஆராய்ந்து பேசும் பண்புள்ள அறிஞர். தமிழ்மொழி அறிவு மட்டுமல்லாது, பல வளர்ச்சியடைந்த மொழிகளின் அறிவைப் பெற்றிருந்ததினால், நிதானத்துடனும் பிற பண்பாடுகளை மதித்தும் பேசும் தன்மை கொண்டிருந்தார்.

இத்தகைய பெரியார் தமிழுக்கு எத்தகைய தொண்டாற்றினார். மிகச் சுருக்கமாகச் சொல்வதானால், அடிகளார் இரண்டு முக்கிய தொண்டுகளை ஆற்றினார். அந்த இரண்டையும் பொறுத்து, அவரை விடப் பிறர் கூடுதலாகத் தொண்டாற்றியுள்ளனர் என்று கூறமுடியாது.

ஒன்று, தமிழியல் என்னும் துறை உருவாகவும் அது பற்றிய அறிவு ஆங்கிலம் வழியாகச் சர்வதேச அறிஞர்களை அடையவும் தொண்டாற்றினார். வேறொரு வார்த்தையிற் கூறுவதாயின், தமிழியலைச் சர்வதேச அறிவுத் துறையாக உயர்த்தினார். இதற்கு, முதன்முறையாக ஆங்கிலத்திலே தமிழ்ப் பண்பாடு பற்றிய சஞ்சிகையை (Tamil Culture) தொடக்கி நடத்தினார். பல நாடுகளுக்குச் சென்று தமிழ் பற்றி விரிவுரைகள் நடத்தினார். தமிழாராய்ச்சிக்கென்று உலக நிறுவனம் ஒன்றை அமைத்து, சர்வதேச மாநாடுகள் நடைபெற உதவினார். இத்தகைய தொண்டு பிறரால் ஆற்றப்படவில்லை.

இரண்டாவதாக, சர்வதேசத் தமிழர் மத்தியில் ஓர் ஒற்றுமையுணர்வை முதல் முறையாக வளர்க்க உதவினார். தமிழ்நாடு, இலங்கை, மலேஷியா ஆகிய மூன்று நாடுகளிலும் வாழ்ந்த தமிழரிடையேதான் முன்பு இத்தகைய உணர்வு காணப்பட்டது. ஆனால், தனிநாயக அடிகளார் உலகின் மூலைமுடுக்குகளில் வாழும் தமிழரைப் பற்றி ஆய்வு நடத்தி, அங்கெல்லாம் சென்று தமிழுணர்வைப் பரப்பி, உலகத் தமிழர் பற்றிய அறிவை வளர்த்து, ஓர் ஒற்றுமையுணர்வையும் ஏற்படுத்தினார். இவையே இவரை ஒரு தனித்துவமான தமிழ்ப் பெரியாராக மாற்றிவைத்துள்ளன.

(13 புள்ளிகள்)

[பக். 5 ஐப் பார்க்க

kalvi.lk

(ஆ) பின்வரும் உரைப்பகுதியை வாசித்து, அதன்கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

இக்காலத்து உரைநடை எல்லாருக்கும் புலப்படக்கூடியதாக அமைவதற்கு நாம் சில காரணங்கள் கூறலாம். பேச்சு வழக்கில் உள்ள சொற்கள், சொற்றொடர்கள், இலக்கண அமைதி முதலியவற்றை இக்காலத்து எழுத்தாளர்கள் பெரிதும் பயன்படுத்துதலினாலே இக்காலத்து உரைநடை மக்களுக்குத் தெளிவாகப் புலப்படுகின்றது. அது பேச்சு வழக்கோடு மிக நெருங்கிய தொடர்புடையதாக இருத்தலினாலேதான் அது பெரிதும் போற்றப்படுகின்றது. இத்தகைய நடைதான் ஓர் இயற்கை நடை எனப்படுகின்றது. அங்ஙனம் பேச்சு வழக்கோடு தொடர்பில்லாத ஒரு நடை இயற்கை நடையாகாது. முற்காலங்களிற் கையாளப்பட்ட நடை வகைகளுட் சில, செயற்கைப் பண்பு வாய்ந்தனவாக இருத்தலை நாம் முந்திய அதிகாரங்களுட் கண்டோம். பெயரெச்ச வினையெச்சங்களை அமைத்து வாக்கியங்களை மிக நீட்டி எழுதுவது முற்கால வழக்காறாக இருந்தது. இக்காலத்தில் அம்மரபு கைவிடப்பட்டு வருகின்றது. பொருளைச் சிறுசிறு வாக்கியங்களிலே தெளிவாக அமைத்து எழுதும் முறையைச் சிறந்த எழுத்தாளர்கள் கையாண்டமையால், அந்நடைவகை இக்காலத்திற் பெருவழக்காகிவிட்டது. பொதுமக்கள் விரும்பிப் படித்தற்கு உரிய நடை சிறுசிறு வாக்கியங்களாக அமையும் நடையே. அத்தகைய நடை இக்காலத்தில் தேவைப்பட்டமையால் அத்தேவைக்கு ஏற்ப அந்நடைவகை இக்காலத்தவராற் பெரிதுங் கையாளப்பட்டு வருகின்றது. இந்நடை பல்வகைப் பொருள்களையும் தெளிவாக எடுத்துக்காட்டத்தக்க ஆற்றலுடையதாக அமைந்திருத்தல் நோக்கற்பாலது. இத்தகைய ஆற்றல் வாய்ந்த இந்நடையினை இலக்கண வழுக்கள் மலியப் பெற்றதொன்று எனக் கருதுவாரும் உளர். தொல்காப்பியர் கூறிய விதிகளுக்கு அமைய எழுதும் முறை இக்காலத்திற் கைவிடப்படுகின்றதே என்று வருந்துவாரும் பலருளர். வழக்கிலுள்ள மொழி எதுவாயினும் அதன் இலக்கண மரபு காலத்திற்குக் காலம் மாற்றமடைந்து செல்லும் இயல்பினது. இந்நூற்றாண்டிலே பேச்சு வழக்கிலும் எழுத்து வழக்கிலும் உள்ள தமிழ்மொழி, இலக்கண அமைதியிலே முற்காலத்துத் தமிழிற் பெரிதும் வேறுபட்டிருத்தலில் வியப்பொன்றுமில்லை. இக்காலத்து வழக்கிலுள்ள மொழிக்கு இலக்கணம் எழுதப்படாமையான் அதற்கு இலக்கணம் தொல்காப்பியமும் நன்னூலும் என்று எண்ணி, அந்நூல்களிற் கூறப்பட்டுள்ள விதிகளுக்கு அமையாத இக்கால வழக்குக்களையெல்லாம் பிழையெனக் கருதுகின்றோம். வளரும் மொழிகளின் இயல்பை நாம் அறிந்துக்கொள்ளாமையே இதற்குக் காரணமாகும்.

(i) இக்கால உரைநடை மக்களுக்கு இலகுவாகப் புரிவதற்கு ஆசிரியர் கூறும் காரணம் யாது?

(ii) முற்கால உரைநடைக்கும் இக்கால உரைநடைக்கும் இடையே ஆசிரியர் கூறும் வேறுபாடு யாது?

(iii) ஆசிரியரின் கருத்துப்படி பொதுமக்கள் விரும்பிப் படிப்பதற்கு உரிய உரைநடை எத்தகையது?

(iv) இக்கால வழக்குகளையெல்லாம் நாம் பிழை எனக் கருதுவதற்கு ஆசிரியர் கூறும் காரணம் யாது?

(v) இயற்கை நடை, செயற்கை நடை என ஆசிரியர் எவற்றைக் கூறுகிறார்?

(vi) வளரும் மொழிகளின் இயல்பு பற்றிய ஆசிரியரின் கருத்து யாது?

(12 புள்ளிகள்)

(13 + 12 = 25 புள்ளிகள்)

**3.** பின்வருவனவற்றுள் யாதேனும் ஒரு தலைப்பைத் தெரிந்து **300 - 350** சொற்கள் கொண்ட கட்டுரை எழுதுக.

(அ) மொழியாற்றலை வளர்த்தல்

(ஆ) வாசிப்பும் அறிவு வளர்ச்சியும்

(இ) பாடசாலைக் கல்வியும் பிரத்தியேக வகுப்புகளும்

(ஈ) போதைப்பொருள் வியாபாரமும் அதன் விபரீதமும்

(உ) 'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்!' (25 புள்ளிகள்)

|பக். 6 ஐப் பார்க்க

kalvi.lk

## பகுதி II

**4.** (அ) சங்கமருவிய காலத்தில் எழுந்த நூல்களைப் பொருளடிப்படையில் வகைப்படுத்துக.

(ஆ) தமிழிலக்கிய வரலாற்றில் சங்கமருவிய காலத்தை இருண்டகாலம் எனக் கொள்வது பொருந்துமோ என ஆராய்க.

(இ) தமிழிலக்கிய வரலாற்றில் காரைக்காலம்மையார் பெறும் முக்கியத்துவத்தை விளக்குக.

(15 புள்ளிகள்)

**5.** (அ) பக்தி இயக்கத்தைப் பொது மக்களின் மத்தியில் கொண்டு செல்வதற்கு நாயன்மார்களும் ஆழ்வார்களும் கையாண்ட வழிமுறைகளை விளக்குக.

(ஆ) பல்லவர் காலத்தில் எழுந்த சமயம்சாரா இலக்கியங்கள் குறித்துக் கருத்துரைக்குக.

(இ) பிள்ளைத்தமிழ்ப் பிரபந்தத்தின் அடிப்படைகள், அக்காலப் பக்தியிலக்கியங்களிற் காணப்படுமாற்றை விளக்குக.

(15 புள்ளிகள்)

**6.** பத்தொன்பதாம் நூற்றாண்டில்,

(அ) அகராதி
(ஆ) நூற்பதிப்பு
(இ) பத்திரிகை

ஆகிய துறைகளில் ஈழத்தவர் ஆற்றிய பணிகளை விளக்குக. (15 புள்ளிகள்)

**7.** பின்வருவோரில் யாரேனும் **இருவர்** தமிழ் ஆய்வு வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பினை மதிப்பிடுக.

(அ) சுவாமி விபுலாநந்தர்
(ஆ) பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை
(இ) பேராசிரியர். க. கைலாசபதி
(ஈ) பேராசிரியர் ம. மு. உவைஸ் (15 புள்ளிகள்)

Education

**8.** (அ) (i) பின்வரும் வாக்கியத்திலுள்ள பொருள் மயக்கத்தை இனங்கண்டு விளக்குக.
ஆங்கிலேயர் வருகையினால் வளர்ச்சி குன்றியிருந்த உள்ளூர்க் கலாசாரம் ஊக்கம் பெற்றது.

(ii) பின்வரும் வாக்கியத்திலுள்ள வழுவைச் சுட்டிக்காட்டி, வழுவற்ற வகையில் வாக்கியத்தைத் திருத்தி எழுதுக.
மாதவி வேத்தியல், பொதுவியல் என்ற இரு மரபுகளையும் சமூகத்தின் உயர்க்குழாத்தினருக்கு ஆடிக்காட்டிய காலத்திலேதான் இடையர் மத்தியில் ஆய்ச்சியர் குரவையும் குறவர் மத்தியில் குன்றக்குரவையும் இருந்துள்ளது.

(iii) பின்வரும் வாக்கியத்தில் உள்ள விடயங்கள் யாவும் ஒரே வாக்கிய அமைப்பில் வரத்தக்க வகையில் எழுதுக.

- சிலப்பதிகாரத்தை இளங்கோவடிகள் இயற்றியுள்ளார்.
- சிலப்பதிகாரமே தமிழில் தோன்றிய முதலாவது காப்பியமாகும்.
- ஒரு பெண்ணைத் தலைமைப்பாத்திரமாகக் கொண்டது என்ற சிறப்பு சிலப்பதிகாரத்துக்கு உண்டு.

(iv) பின்வரும் வாக்கியத்தை செய்வினை வாக்கியமாக மாற்றி எழுதுக.
சங்ககாலம் எனக் குறிப்பிடும் காலத்தில் தோன்றிய தனிப்பாடல்கள் பிற்காலத்தில் அவற்றின் பொருள், யாப்பு, அடியெண்ணிக்கை எனபவற்றின் அடிப்படையில் வகுக்கப்பட்டு அகநானூறு, புறநானூறு முதலான நூல்களாகத் தொகுக்கப்பட்டன.

(v) பின்வரும் சொற்களை அவற்றில் இடம்பெற்றுள்ள எழுத்துப் பிழைகளைத் திருத்தி சரியான முறையில் எழுதுக.

- சுயேட்சை வேட்பாளர்
- வித்துவசிரோண்மணி

(10 புள்ளிகள்)

(ஆ) பின்வருவனவற்றுள் ஏதேனும் **ஒன்றினைப் பற்றிச்** சிறுகுறிப்பு வரைக.

(i) வினைச்சொல்லின் அடிப்படைப் பண்புகள்
(ii) மூவிடப் பெயர்கள்
(iii) வேற்றுமைப் புணர்ச்சியும் அல்வழிப் புணர்ச்சியும்

(05 புள்ளிகள்)
(10 + 05 = 15 புள்ளிகள்)

* * *

kalvi.lk

kalvi.lk